**ARTICLE 16 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00038**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 88–93
Received: 1 October 2026 • Accepted: 1 October 2026

# இராசிபுரம் வட்ட சிறுதெய்வங்களின் கோயில் அமைப்பும் வழிபாடும்

**திருமதி.லீலாவதி வெ[1,*], முனைவர்.தினகரன் ப[2]**
[1]முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழ்த் துறை,கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,நஞ்சனாபுரம்,ஈரோடு, India
[2]துறைத் தலைவர்,தமிழ்த்துறை,கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,நஞ்சனாபுரம்,ஈரோடு., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** திருமதி.லீலாவதி வெ — leelaarun0912@gmail.com

## Abstract
The worship of gods is what arose out of fear. From that time to this day, it is no exaggeration to say that everyone's life is encompassed in the single word 'faith'. The one who is the beginning and the end of it is 'God'. History and literature say that our Tamil nation was the race that excelled in culture and civilization before civilization emerged and developed in various parts of the world. The worship of God, which is integral to their lives, is the main worship of the Tamils. The man who worshipped and worshipped nature, eventually started worshipping his ancestors as well. He who feared that some hindrance would come to him due to the untimely deaths of his family, started worshipping the dead as well. Thus, the tradition of each family worshipping separate gods emerged as the worship of minor gods. People perform festivals and worships to this god according to their living conditions. In this regard, this research article aims to investigate the locations and worship of minor deities in Rasipura, one of the municipalities of Namakkal district.

## ஆய்வுச் சுருக்கம்
அச்சத்தின் காரணமாக தோன்றியவையே தெய்வ வழிபாடாகும். அன்றிலிருந்து இன்றுவரை ‘நம்பிக்கை’ என்ற ஒற்றை சொல்லில் அனைவரின் வாழ்க்கையும் அடங்கியுள்ளது என்றால் மிகையாகாது. அதற்கு முதலும் முடிவுமாக இருப்பவர் ‘கடவுள்’. உலகின் பல்வேறு பகுதிகளில் நாகரிகம் தோன்றி வளர்வதற்கு முன்பே, பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கிய இனம் நம் தமிழினம் என்று வரலாறுகளும் இலக்கியங்களும் கூறுகின்றன. இவர்களின் வாழ்க்கையில் ஒன்றியிருக்கும் இறை வழிபாடே தமிழர்களின் தலையாய வழிபாடாகும். இயற்கையை வழிபட்டு வணங்கிய மனிதன், நாளடைவில் தம் முன்னோர்களையும் வழிபடத் தொடங்கினான். தம் குடும்பத்தில் அகால மரணமடைந்தவர்களால் தமக்கு ஏதேனும் இடையூறு வந்துவிடுமோ? என்று அஞ்சியவன் இறந்தவர்களையும் வழிபடலானான். இவ்வாறு, ஒவ்வொரு குடும்பமும் தனித்தனித் தெய்வங்களை வழிபட்ட மரபே சிறுதெய்வ வழிபாடாக முகிழ்த்தது. மக்கள், தம் வாழ்நிலைக்கு ஏற்ப இத்தெய்வத்திற்குத் திருவிழாக்களையும் வழிபாடுகளையும் செய்கின்றனர். அந்த வகையில் நாமக்கல் மாவட்ட நகராட்சிகளில் ஒன்றான இராசிபுர வட்ட சிறுதெய்வங்களின் அமைவிடங்களையும் வழிபாட்டையும் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**Keywords / திறவுச் சொற்கள்:** வழிபாட்டின் வளர்ச்சி நிலைகள் – சிறுதெய்வம் விளக்கம் – பொதுப்பெயர் அமைவு – கோயிலின் அமைப்பு – வழிபாடும் நம்பிக்கைகளும் – அபிஷேக வழிபாடு – இராசிபுரம் மாரியம்மன் – அங்காளம்மன் - இரா.புதுப்பட்டி துலக்க சூடாமணியம்மன்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** வெ, தி., & ப, மு. (2026). இராசிபுரம் வட்ட சிறுதெய்வங்களின் கோயில் அமைப்பும் வழிபாடும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

வழிபாட்டின் வளர்ச்சி நிலைகள்
காலத்திற்கேற்றவாறு வழிபாட்டின் தன்மைகளை,
இயற்கை வழிபாடு
விலங்கு வழிபாடு
மர வழிபாடு
முன்னோர் வழிபாடு
நடுகல் வழிபாடு
சிறுதெய்வ மற்றும் பெருந்தெய்வ வழிபாடு
என்று வகைப்படுத்தலாம். இதனை,
திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்

### மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்1

என்னும் சிலப்பதிகார பாடல் அடிகள் மூலம் அறியலாம். இயற்கை வழிபாடே அனைத்திற்கும் மூலக்காரணமாய் அமைந்திருக்கிறது. சங்ககாலம் முதலே இவ்வழிபாட்டின் தொன்மையைக் காணலாம்.

### சிறு தெய்வம் - சொல் விளக்கம்

இச்சொல் முதன்முதலாக **‘சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்’** என்று அப்பர் தேவாரத்தில் கூறப்படுகிறது. இதன் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு ஆகும். இதற்கு நேர்மாறாகப் **‘பெருந்தெய்வம்’** என்ற சொல் வழக்கு புறநானூற்றிலேயே காணப்படுகிறது. இரண்டு வேந்தர்களையும் ஒன்றாகக் கண்ட புலவர் **‘இரு பெருந்தெய்வமும் உடன் நின்றா’** (பா.எண்.58) என்று பலராமனையும் திருமாலையும் நினைத்துப் பாடுகிறார்.

**‘சிறு தெய்வம்’** பிராமணரால் பூசை செய்யப்பெறாதவை ஆகும். ஆதலால், சிறு தெய்வம் இரத்தப்பலி பெறும் தெய்வங்களாகும். இத்தெய்வங்கள் நாள்தோறும் ஆறுகாலப் பூசை பெறுவதில்லை. இத்தெய்வங்களின் திருவிழாக்களில் ‘சாமியாட்டம்’ இடம்பெறும்.

### சிறுதெய்வங்களின் பொதுப்பெயர் அமைவு

சிறு தெய்வங்களின் பெயர்கள் பெருந்தெய்வங்களின் பெயர்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன. ஆண் சிறு தெய்வங்களின் பெயர்கள் பொதுவாக **அய்யா, அப்பன், அடியான், சாமி** என்றும் (கருப்பையா, இருளப்பன், பனையடியான் கருப்பசாமி) பெண் தெய்வங்களின் பெயர்கள் **அம்மன், நாச்சி, கிழவி** என்றும் (முத்தாலம்மன், பெரிய நாச்சி, அரியாக்கிழவி) அழைக்கப்படுகிறது.

### கோயிலின் அமைப்பு

சிறுதெய்வக் கோயில்களின் அளவு மிகச்சிறியது. சில இடங்களில் அவை கட்டடமின்றி அமைதலும் உண்டு. இன்னும் சில இடங்களில் மரங்களையே தெய்வமாகக் கருதி வழிபடுவர். மரங்கள் பெரும்பாலும் **வேம்பு, பனை, பூவரசு** ஆகியவையாக இருக்கும். பெண் தெய்வக் கோயில்கள் பெரும்பான்மை வடக்கு நோக்கியும், சிறுபான்மை கிழக்கு நோக்கியும் அமைந்துள்ளது.

சிறுதெய்வக் கோயில்கள் பொதுவாக ஊரின் எல்லை, குளக்கரை, கண்மாய்க்கரை, களத்துமேடு, வயற்புறம், அழிந்த கோட்டைகளில்

வாசற்பகுதி இருந்த இடம், நெடுஞ்சாலை ஓரம் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும். அந்த இடங்கள் அனைத்தும் காவலுக்குரிய இடங்கள் ஆகும். எனவே, பெரும்பாலான சிறு தெய்வங்கள் காவல் தெய்வங்களாக அமைந்துள்ளன.

பெண் சிறுதெய்வங்கள் பீடத்தின் மேல், அமர்ந்த கோலத்தில் இரண்டு கைகளோடு, தலையில் வெவ்வேறு வகையான மகுடங்களுடன் இருக்கும். கையில் வேல், வடிந்த காது, கழுத்தில் காரை, காலில் தண்டை ஆகியவற்றோடு அமைந்திருக்கும். ஒன்றிரண்டு தனித்த வேறுபாடுகளும் உண்டு. **எடுத்துக்காட்டாக:** உச்சினி (உஜ்ஜயினி) மாகாளியம்மன் இடது உள்ளங்கையில் கபாலம் ஏந்தியிருக்கும். சில பெண் தெய்வங்கள் இடுப்பில் குழந்தை ஒன்றை வைத்திருப்பதாக நாட்டுப்புறப் பாடல்களிலும், வழக்கு மரபுகளிலும் செய்திகள் உள்ளன. ஆண் தெய்வங்கள் நின்ற கோலத்திலும், ஒரு காலை மட்டும் முழங்காலிட்ட கோலத்திலும், தவழ்ந்த கோலத்திலும் அமைந்திருக்கும்.

## வழிபாடும் நம்பிக்கைகளும்

நாமக்கல் மாவட்டத்தில் வழிபாடுகள் பல நிலைகளில் காணப்படுகின்றன. பெருந்தெய்வம் அளவிற்கு வழிபாடுகள் சிறுதெய்வத்திற்குச் செய்யப்படுவதில்லை. எனினும் பெரும்பகுதிக் கோயில்களில் ஒரு காலப் பூசையாகப் பின்பற்றப்படுகின்றன. சிறுபகுதி கோயில்களில் வாரத்தில் இரண்டு நாட்கள், மாதத்தில் ஒருசில நாட்களும் ஆண்டுகளுக்கு மூன்று அல்லது நான்கு நாட்களும் பூசைகள் நடைப்பெற்று வருகின்றன.

## அபிஷேக வழிபாடு

நாள் வழிபாட்டினைத் தொடர்ந்து சிறப்பு நாட்களிலும் விழா நாட்களிலும் அபிஷேகங்கள் நடத்தப்பெறுகின்றன. இச்சிறப்பு அபிஷேகம் வேண்டுதல்காரர்களாலும் நடத்தப்பெறும். ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாட்களில் ஒவ்வொருவரும் செய்யும் 'படி' முறையும் இவ்வாட்டாரத்தில் காணப்படுகின்றது. அபிஷேகம் செய்வதற்கு விரும்புவோரை இவ்வாட்டாரத்தில் **‘உபயதாரர்’** என அழைக்கப்படுகின்றனர். அபிஷேகத்திற்குத் தேவையான பொருட்களை உபயதாரர் கொண்டு வந்து பூசாரியிடம் கொடுப்பர். பூசாரி ,கோயிலுக்கு வந்திருக்கின்ற அபிஷேகம், புதிய துணிகளை அம்மனுக்கு அணிவித்து மலர் மாலைகளால் அலங்கரிப்பர். இவ்வபிஷேகம் அனைத்தும் கருவறையில் உள்ள மூலவருக்கு மட்டுமே நிகழ்த்தப்பெறும்.

அருள்மிகு மாரியம்மன் - செல்லாண்டியம்மன் திருக்கோயில் (இராசிபுரம்)
இறைவன்: அருள்மிகு மாரியம்மன்
தல விருட்சம்: வேப்ப மரம்

## தலச் சிறப்பு

இத்திருத்தலம் இராசிபுரம் நகரின் மேற்குப் பகுதியில் பெரிய மதிற்சுவருடன் மிகச் சிறப்பான, பொலிவுடன் விளங்குகிற பிரசித்திப் பெற்ற தலமாகும். ஒரு காலத்தில் ஊர் மக்கள் எல்லாம் பிளேக், காலரா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு, எல்லோரும் ஊரை விட்டு வெளியேறிக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது திருவிழாவிற்கான

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

ஏற்பாடு நடைபெற்று, காப்புக்கட்டி, கம்பம் போடப்படும். பிறகு ஒரு சிலர், கம்பம் போட்ட பிறகு நம்மில் யாரும் ஊரை விட்டு வெளியேறக் கூடாது என்று கூறி அங்கேயே இருந்தார்கள். அப்பொழுது திருவிழா முடிந்து குளத்தில் கம்பம் விடுவது வழக்கம். அப்படி கம்பம் விட்டுவிட்டு கோயிலுக்கு வருவதற்கு முன், குளத்தில் விட்ட கம்பமானது கோயில் முன்பாக வந்து இருந்தது. அதைக் கண்ட பெரியவர்கள், ஆச்சரியத்துடன் பார்த்தபோது சில தாய்மார்களுக்கு அருள் வந்து, மாரியம்மன் தன் கணவர் இறந்த இடத்திலேயேதான் இருக்க வேண்டும் என்றும் அருள்வாக்கு சொல்லியது.

அன்று முதல் நித்திய சுமங்கலியாக மாரியம்மன் இருக்க வேண்டும் என்றமையால், வருடந்தோறும் பண்டிகைக் காலங்களில் பழைய கம்பத்தை எடுத்துவிட்டு, புதிய கம்பத்தை கோயில் முன்பு நடுவது வழக்கமாக இருந்து வருகிறது. வருடம் முழுவதும் அம்மனுக்கு கம்பம் உள்ள திருக்கோயிலாகும்.

நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி முதல் – பகல் 1.00 மணி வரை

## அன்னாதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னாதானத் திட்டத்தின்படி தினந்தோறும் 25 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

இராசிபுரம் அங்காளம்மன் திருக்கோயில்

## தல சிறப்பு

ஆகமவிதிகளின்படி அருள்மிகு அங்காளம்மன் சிலை செய்யப்பட்டது. தற்போதைய வெளி பிரகாரம் உள்ளிட்ட இடத்தில் கல் மண்டபம் மற்றும் அன்னையின் மற்றொரு அவதாரமாக உள்ள பேச்சியம்மன் என்கிற பூங்காவன தாய், பெரியண்டவர் சன்னதி, காவல் தெய்வங்களாக உள்ள வீரபத்திரர் உடன் ராகு கேது தெய்வங்களுடன் ஸ்ரீ ராஜகணபதி, வேல் மயில் முருகன் சுவாமி சன்னதிகளுடன் கூடிய அர்த்த மண்டபம், அன்னைக்கு இருபுற வாயிலில் இரு பெண் காவல் தெய்வங்கள், உடன் நந்திகேஸ்வரர் அன்னையின் திருப்பாதம், ஊஞ்சல் மற்றும் கம்பீர கொடிக்கம்பத்துடன் உள்ள மகா மண்டபம், அதன் வலப்புறத்தில் அன்னையின் பிரதான காவல் தெய்வங்களான இருளப்பன், பாவாடையன், பேச்சியம்மன் (மடியில் குழந்தை உருவுடன் உள்ளது) மற்றும் மதுரை வீரன் உடன் வெள்ளையம்மா, பொம்மி, விநாயகர் ஆகியோர் அருள் பாலிக்கிறார்கள்.

இத்திருக்கோவிலில் தற்போது புதிதாக திருப்பணிகள் நடைபெற்று, தங்கமுலாம் பூசப்பட்ட செம்பாலான விமானமும் அமைக்கப்பட்டுள்ளது சிறப்பாகும்.

## பூசை மற்றும் நடை திறந்திருக்கும் நேரம்

தினமும் ஒரு கால பூசை நடைபெறுகிறது. காலை 9.00 மணி மற்றும் மாலை 6.00 மணி முதல் – இரவு 8.00 மணி வரை நடை திறக்கப்படுகிறது. நாமக்கல்லில் இருந்து 30 கி.மீ தொலைவில் உள்ள இராசிபுரம் நகரின் மையப்பகுதியில் இத்திருக்கோவில் அமைந்துள்ளது.

இரா.புதுப்பட்டி துலக்க சூடாமணியம்மன்

தல விருட்சம்: வேப்ப மரம்

## தல வரலாறு

“திருக்கோயில் அமைந்துள்ள இடத்தில் நவாப் மன்னர் ஒருவர் தனது படை இளைப்பாற முகாம் போட்ட போது, வனாந்திரமாக இருந்த இடத்தில் வளர்ந்திருந்த புற்றினை இடித்துவிட்டார். பின், குருதிப்பீரிட்டு நவாப் மற்றும் ஏவலாட்களுக்கு கண் தெரியாமல் போய்விட, நவாப் மன்னர் பணிந்து புற்றிடம் தங்கிய அம்மனை வேண்டி வழிபட மீண்டும் கண்ணொளி பெற்றதாக இத்திருக்கோவில் திருத்தல வரலாறு கூறுகிறது. மேலும், நவாப் மன்னர் நன்றிக் கடனாக புற்றை சுற்றி கோயில் அமைத்து ஊர் பெரியோர்களைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார். எனவே அம்மனுக்கு **‘துலக்க சூடாமணியம்மன்’** என்ற பெயர் உண்டாயிற்று.”2

## தனிச்சிறப்பு

இவ்வம்மனை பக்தியுடன் வேண்டி வழிபட்டால் கண் நோய்கள் நீங்குகின்றன. உடலில் ஏற்பட்ட கட்டி, மருவு ஆகியவைகளும் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து போகும். ஊமைகள் பேசவும், செவிடர்கள் கேட்கவும் அளப்பரிய சக்தியை உண்மையான பக்தர்களுக்கு அன்னை அருள்புரிகிந்றாள். இத்திருக்கோயில் இராசிபுரத்திலிருந்து வடக்குப் பகுதியில் 12 கி.மீ தொலைவில் உள்ள புதுப்பட்டி எனும் ஊரில் கிழக்கு முகமாக அமைந்துள்ளது.

தினமும் மூன்று கால பூசை நடைபெறுகிறது.

காலை 6.00 மணி முதல் பகல் 1.30 மணி வரை
மாலை 4.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை
அன்னதானம்

இத்திருக்கோயிலில் தினந்தோறும் 25 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

## முடிவுரை

சிறுதெய்வ வழிபாட்டில் ஆண், பெண் என்ற பாகுபாட்டுடன் தெய்வங்கள் இடம் பெறுகின்றன. இதில் ஆண் தெய்வங்களை விட, பெண் தெய்வங்களே எண்ணிக்கையில் அதிகமாகவும் தனிச்சிறப்பிடமும் பெறுகின்றன. மனித வாழ்வில் பெண் சிறப்பிடம் பெறுவதால் பெண்ணைத் தெய்வமாக்கிச் சிறப்பு செய்தனர் என்றும் கூறலாம்.

சிறு தெய்வ வழிபாட்டில் பெண் தெய்வங்கள் மனித உணர்வில் தோன்றியவையாகும். பெரும்பாலும் கோயில் அமைப்பு இல்லை. சிறுதெய்வங்களில் சைவ, வைணவ வேறுபாடில்லை.

தெய்வத்திற்குப் படைக்கும் பொருட்களில் அசைவப் பொருட்களைப் படைக்கும் வழக்கம் மக்களால் உண்டாக்கப்பட்டு வழிபடுவதையும் சிறு தெய்வங்கள் பற்றிய தோற்றக் கதைகள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், உருவத்தோற்றங்கள் யாவும் ஒரே மாதிரியானவை, ஒரே காலத்தவை என்று கூறிவிட முடியாது. ஏனெனில், ஊர்ப்பகுதிகளில் சூழல்களின் தன்மைக்கேற்ப அவை வேறுபட்ட தன்மைகளைக் கொண்டவையாகயும் அமைந்துள்ளன என்பதையும் சிறு தெய்வங்களிடம் வேண்டிக்கொண்ட அனைத்தும் நடைப்பெறும் சாத்தியமிக்கவை என்பதையும் இவ்வாய்வுக் கட்டுரை மூலம் அறியமுடிகிறது.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## அடிக்குறிப்புகள் (Notes)

1. ஸ்ரீ சந்திரன்.ஜெ., சிலப்பதிகாரம், சிலம்பு, மங்கல வாழ்த்துப்பாடல்
2. கோ.அருட்கலை, தமிழர் பண்பாட்டில் நம்பிக்கைகள், ப.131

## துணைநூற் பட்டியல் (References)


1. ஸ்ரீ சந்திரன்.ஜெ., சிலப்பதிகாரம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 1999.
2. அருள்தாசு., தமிழர் பண்பாட்டில் வாழிபாடு, வி.பி.ஞானப்பிரகாசம், சூ.இன்னாசி பதிப்பகம்.
3. நாட்டுப்புறவியல், காவியா பதிப்பகம், முதல் குறுக்குத்தெரு, பிரஸப்புரம், கோடம்பாக்கம், சென்னை – 24.
4. தகவலாளர் பட்டியல்
5. முத்துசாமி.அ., நாமக்கல், வயது 62
6. சீனிவாசன்.கு., திருச்செங்கோடு, வயது 56
7. செல்மா.காமராசன், பொத்தனூர், வயது 57


© 2026 திருமதி.லீலாவதி வெ, முனைவர்.தினகரன் ப. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..